அகில இந்திய வானொலி
திருச்சிராப்பள்ளி

# ஆகாசவாணி செய்திகள்

01.45 pm

**16. 06. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி பிரான்ஸில் நடைபெறும் ஜி-7 உச்சிமாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.

2. நீட் மறு நுழைவுத் தேர்வை முன்னிட்டு வரும் 22-ம் தேதி வரை நாடுமுழுவதும் டெலிகிராம் செயலிக்கு தற்காலிக தடைவிதித்து மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

3. தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் 75 ஆயிரம் ரூபாய் வரையிலான பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்து முதலமைச்சர் திரு. விஜய் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

4. தேர்தல் வாக்குறுதியில் தொிவித்தவாறு சிறு குறு விவசாயிகளின் பயிர் கடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டுமென்று பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

5. தமிழ்நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 12 பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நடைபெற்றதாக எதிர்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி பிரான்ஸ் நாட்டின் இவியன் நகரில் நடைபெறும் ஜி-7 உச்சிமாநாட்டில் இன்று பங்கேற்கிறார்.

தென்னாடுகளின் குரலை பிரதமர் இந்த கூட்டத்தில் எடுத்துரைக்க உள்ளார்.

இதனைத் தொடர்ந்து புதிய நட்புறவு மற்றும் சர்வதேச ஒருமைப்பாட்டுணர்வை கட்டமைப்பது தொடர்பான உயர்நிலை கூட்டத்திலும் பிரதமர் பங்கேற்கவுள்ளார்.

ஜி-7 நாடுகளின் தலைவர்கள், நட்பு நாடுகள் உலக வங்கி பிரதிநிதிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

இந்த மாநாட்டின் ஒருபகுதியாக கனடா பிரதமர் மார்க் கார்னே பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யானுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் பிரதமர் மேற்கொள்கிறார்.

பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் அளிக்கும் இரவு விருந்திலும் பிரதமர் பங்கேற்கிறார்.

பிரதமர் நாளை அமொ◌ிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நலன்சார்ந்த பிராந்திய சர்வதேச பிரச்சனைகள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்கிறார்.

இதனிடையே பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தமது ஸ்லோவேக்கியா பயணம், அந்நாட்டுடனான இந்தியாவின் நட்புறவையும், இருதரப்பு உறவுகளையும் வலுப்படுத்தி உள்ளதாக பெருமிதம் தொ◌ிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தக உறவுகள் இளையோருக்கு பெரிதும் பயனளிக்கும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர் – 1

நாட்டின் கட்டமைப்பு கடந்த 12 ஆண்டுகளில் சாதனை அளவாக மாபெரும் வளர்ச்சியுடன் முன்னெடுத்து செல்லப்படுவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த பாரத பாதையில் அடுத்த தலைமுறைக்கான கட்டமைப்பை உருவாக்க அரசு உறுதியுடன் இருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

கட்டமைப்பு மாற்றங்கள் போக்குவரத்தையும், தளவாடங்களின் பரிவர்த்தனையையும் முன்னெடுத்து சென்று வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளுக்கு திறவுகோலாக அமைந்து என குறிப்பிட்டார்.

புதிய இணைப்புகளால் போக்குவரத்து நேரங்கள் குறைந்ததோடு பரவலான புதிய வாய்ப்புகளும் அதிகரித்து வளமான இந்தியாவிற்கான பாதைக்கு வித்திட்டதாக பிரதமர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நீட்

மருத்துவ இளநிலை படிப்பிற்கான நீட் மறு நுழைவுத் தேர்வு வரும் 21-ம் தேதி நடைபெறுவதை ஒட்டி வரும் 22-ம் தேதிவரை நாடுமுழுவதும் டெலிகிராம் செயலி பயன்பாட்டிற்கு தடைவிதித்து மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் இந்த உத்தரவை வரவேற்றுள்ள தேசிய தேர்வு முகமை வரும் 30-ம் தேதிவரை இதுசார்ந்த தகவல் பரிமாற்றங்களுக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டுள்ளதாக கூறியுள்ளது.

தேர்வெழுதும் மாணாக்கரின் நலன் கருதி இந்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

12 ஆண்டுகள்

பிரதமர் திரு. நரேந்திரமோடி கடந்த 12 ஆண்டுகளில் அனைவரும், அனைவருக்குமான வளர்ச்சி என்ற கொள்கையின் அடிப்படையில் நாட்டில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை கொண்டுவந்துள்ளார்.

ஏழை எளிய மக்கள், மகளிர் இளைஞர்களுக்கான முன்னோடி திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட நிலையில், தீவிரவாதத்திற்கு எதிரான பிரதமரின் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை குறித்த செய்தித் தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

……..

சென்ற ஆண்டு மே 6, 7 தேதிகளில் நடத்தப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல், பயங்கரவாதத்தை எந்த வித்திலும் இந்தியா சகித்துக் கொள்ளாது என்ற உறுதியான செய்தி உலகத்திற்கு பறைசாற்றப்பட்டது.

தீவிரவாத நடவடிக்கைகளை கொள்கையாக கொண்டிருந்தால் நேரடி வலுவான நடவடிக்கைள் மூலம் அது வேரோடு களையப்படும் என்பதையும் இந்தியா முன்னெடுத்து சென்றுள்ளது.

லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஸ் இ முகமது, ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்புகளின் புகலிடங்களை இலக்காக கொண்டு நம் ராணுவம் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் உள்ள 9 தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன.

நூற்றுக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஒரே தாக்குதல் மூலம் 11 விமானப் படைத் தளங்கள் மீது, தாக்குதல் நடத்திய முதல் நாடு என்ற பெயரை கடந்த மே 9, 10 தேதிகளில் இந்தியா பெற்றது குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் பாகிஸ்தானின் 20 சதவிகித விமானப் படையின் கட்டமைப்பு தகர்க்கப்பட்டது.

இந்தியாவின் இந்நடவடிக்கைக்கு உலக நாடுகளும், சர்வதேச தலைவர்களும், தங்களது ஆதரவை வழங்கினர்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்நடவடிக்கையால் இந்தியா உலக நாடுகளின் வரிசையில் தனி இடம் பெற்றதோடு, அதன் செயல்பாட்டு திறனையும் உலக நாடுகள் வியப்புடன் கண்ணோக்கின.

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதலின் வெற்றி குறித்து திருச்சி தூய வளனார் கல்லூரியின் வணிகவியல் பேராசிரியர் டாக்டர் அருள் எமது செய்தி பிரிவிடம் பேசுகையில்

.. வாய்ஸ் ..

வலுவான வெளியுறவுக் கொள்கை மூலம், ஏழு அண்டை நாடுகளில் பரவிக் கிடக்கும் 15 ஆயிரம் கிலோ மீட்டர் எல்லை பகுதிகளை பாதுகாப்பாக வைப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுள்ளதோடு, பாதுகாப்புத் துறையில் சுயசார்புடன் தேசத்தை பிரதானமாக கொண்டு செல்கிறது.

தீவிரவாதத்திற்கு எதிராக எந்த சமரத்திற்கும் இடம் கொடுக்காமல் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு உறுதியுடனும், வலிமையுடனும் வளர்ச்சிப்பாதையில் முன்னேறி வருகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் பயிர்க்கடன்

தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகளின் மூலம் 75 ஆயிரம் ரூபாய் வரை பயிர்க்கடன் பெற்ற சிறு குறு மற்றும் இதர பெருவிவசாயிகளுக்கு 100 சதவிகிதம் முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்து முதலமைச்சர் திரு. விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இதன்மூலம் கடந்த நிதியாண்டில் பயிர்கடன் பெற்ற அனைத்து விவசாயிகளுக்கும் அதிகபட்சமாக 75 ஆயிரமும்,

குறைந்தபட்சமாக ரூபாய் 35 ஆயிரமும் பணப்பயன் கிடைக்கும்.

இந்த பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு மே ஒன்றாம் தேதிமுதல் இந்த ஆண்டு பிப்ரவரி 28-ம் தேதிவரை கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் பெற்றுள்ள 14 லட்சத்து 43 ஆயிரத்து 504 விவசாயிகள் பயனடைவர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பேரவை பயிற்சி

தமிழக சட்டப் பேரவைக்கு புதிதாக தேர்வாகியுள்ள பேரவை உறுப்பினர்களுக்கான 2 நாள் புத்தாக்க பயிற்சியை முதலமைச்சர் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறும் இந்த பயிற்சி வகுப்பில் 17-வது சட்டப்பேரவைக்கு தேர்வாகியுள்ள உறுப்பினர்களுக்கு பேரவை செயல்பாடுகள் குறித்து எடுத்துரைக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் மின்தடை

தமிழ்நாட்டில் மின்தடை அதிகரித்து வரும் சூழலில் மின் தேவையை சமாளிப்பது குறித்து முதலமைச்சர் சென்னையில் இன்று ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

அன்புமணி

தேர்தல் வாக்குறுதியில் தொிவித்தவாறு சிறு குறு விவசாயிகளின் பயிர்ககடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டுமென்று பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டள்ள அறிக்கையில் நடுத்தர மற்றும் பெரு விவசாயிகள் வாங்கிய கடனில் 50 விழுக்காட்டை தள்ளுபடி செய்ய அரசு முன்வர வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழ்நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 12 பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக எதிர்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என குறைகூறியுள்ளார்.

இதனிடையே குற்றவாளிகள் அச்சமின்றி குற்றங்களில் ஈடுபடுவதாக தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில் குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக் குறியாகி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

P.I.B.

மத்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும், சென்னை பத்திரிக்கை தகவல் அலுவலகம் சார்பில் ஊடகவியலாளர்களுக்கான ஒருநாள் பயிலரங்கு சேலத்தில் இன்று நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இளம்பகவத் இதனை துவக்கி வைத்தார்.

தென் மண்டல பத்திரிக்கை தகவல் அலுவலக தலைமை இயக்குநர் திரு. பழனிச்சாமி

சென்னை பத்திரிக்கை தகவல் அலுவலக இயக்குநர் பி. அருண்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மதுரை

மதுரை திருமங்கலத்தில் தியாகி விஸ்வநாத தாஸின் 140-வது பிறந்ததின விழாவை ஒட்டி அன்னாரது சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஆகாஷ் இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இருவரி

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அருவியில் நீர்வரத்து சீரானதையடுத்து 12 நாட்களுக்கு பிறகு சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறை இன்று அனுமதி வழங்கியுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

நீலகிரி

நீலகிரி மாவட்டம் குன்னூர் ஆடர்லி தேயிலை தோட்டத்தில் காட்டுயானைகள் குட்டியுடன் முகாமிட்டுள்ளதால் இரவு நேரத்தில் அப்பகுதிகளில் நடந்து செல்ல வேண்டாம் என வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் சுவாமி திருக்கோவிலில் தேர்திருவிழாவை முன்னிட்டு முன்னேற்பாட்டு பணிகள் குறித்து ஆட்சித்தலைவர் திரு. ஆனந்த் மோகன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

தேரோட்டத்திற்கு தேவையான பணிகளை உரிய நேரத்தில் விரைந்து முடித்திட அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

மகளிர் உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் சவுத்தாம்ப்டனில் இன்று இரவு 7 மணிக்கு நியூசிலாந்து – இலங்கையையும்

இரவு 11 மணிக்கு நடைபெறும் மற்றொரு போட்டியில் இங்கிலாந்து - அயர்லாந்தையும் எதி◌ா◌்கொள்கின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

ஆக்லாந்தில் நடைபெறும் மகளி◌ா◌் சர்வதேச ஹாக்கி போட்டியின் அரையிறுதிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

நாளைமறுநாள் நடைபெறும் கடைசி லீக் போட்டியில் இந்தியா உருகுவேயை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இ ந்த செய்தி யறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖